பக்கங்கள்; ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6·00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஆடி 18 வெள்ளிக்கிழமை (02-08-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 167

# கிளிநொச்சியிலிருந்து 1 லட்சம் பேர் துணுக்காய் பகுதிக்கு இடம்பெயர்வு!

## ஆஸ்பத்திரி, ஐ. சி. ஆர். சி. மற்றும் நிறுவனங்கள் மல்லாவிக்கு மாற்றம்

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 2

கிளிநொச்சி நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் வாழ்ந்த மக்கள் –

அப்பகுதிகள் மீது தாக்குதல் நடக்கலாம் என்ற அச்சத்தில் வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்;

இவ்வாறு சுமார் ஒரு லட்சம் மக்கள் இடம் பெயர்ந்திருக்கலாம் என்றும் –

அவர்களில் பெரும் பாலானோர் துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அடங்கும் துணுக்காய், மல்லாவி, புத்துவெட்டுவான் மற்றும் மாங்குளம் பகுதிகளுக்கு இடம் பெயர்ந்திருப்பதாகவும்– தொண்டர் நிறுவன வட்டாரங்களில் இருந்து அறியவந்துள்ளது,

இதேவேளை கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரியும் மல்லாவிக்கு மாற்றப்பட்டுள்ளது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, எம். எஸ். எவ். மருத்துவக்குழு, ஒக்ஸ்பாம், கெயர் போன்ற சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் அலுவலகங்களும் அகதிகளுக்கான ஐ. நா தூதரக அலுவலகமும் மல்லாவிக்கு இடம் மாற்றப்பட்டுள்ளன.

அரசாங்கப் படையினர் பரந்தனுக்கு முன்னேறுவதற்கு முன்னரே கிளிநொச்சி நகரிலிருந்தும் அதன் சுற்றுப்புறங்களில் இருந்தும் அநேக மக்கள் இடம்பெயரத் தொடங்கி விட்டனர்.—

படையினர் பரந்தனுக்கு முன்னேறியதைத் தொடர்ந்து எல்லா மக்களுமே துணுக்காய், மல்லாவி, மாங்குளம் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து விட்டனர் — என்று தொண்டர் நிறுவன வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

மேற்கூறிய பகுதிகளுக்கு மட்டுமின்றி கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் ஏனைய பிரதேசங்களுக்கும் மக்கள் பல பாதைகளாலும் இடம்பெயர்ந்துள்ளனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் பரபரப்பை ஏற்படுத்திய துப்பாக்கி நபர்

### புலி என்று கூறித் துரத்தினர்

கொழும்பு, ஒக. 2

துப்பாக்கி ஏந்திய இளைஞர் ஒருவரை புலி என்று கூறிக் கொண்டு பொலீஸார் வீதி வழியாகத் துரத்திச் சென்றனர். ''நான் புலி அல்ல'' எனக் கத்தியவாறே அந்த இளைஞரும் தலைதெறிக்க ஓடினார்.

இதனால் நேற்றுமுன்தினம் கிராண்ட்பாஸ் — மாளிகாவத்தைப் பகுதியில் பெரும்பரபரப்பு நிலவியது.

இறுதியில் அந்த இளைஞரை மாளிகாவத்தை பகுதியில் வைத்து பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து மடக்கிப் பிடித்தனர். இளைஞரை விரட்டி வந்த சனக் கூட்டமும் அவரைச் சும்மா விடவில்லை. இரும்புப் பொல்லுகளாலும், தடிகளாலும் தாக்கியது. இறுதியில் அந்த இளைஞர் பொலீஸாரால் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

அவர் பாதாள உலக தலைவர் ஒருவரின் உடன் பிறந்த சகோதரர் என்பது பின்புதான் தெரியவந்ததாம்.

புலி என்று நினைத்து அந்த இளைஞரைத் தாக்கிய மக்கள், அவர் பாதாள உலகத் தலைவரின் சகோதரர் என்பதை அறிந்ததும் மெதுவாக அங்கிருந்து நழுவி விட்டனர் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

## நிபந்தனைகளை முன்வைக்காது அரசும் புலிகளும் பேசவேண்டும்

### தாம் உதவத் தயார் என்கிறார் தொண்டா

கொழும்பு, ஒக. 2

''அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் நிபந்தனைகளை முன்வைக்காது பேச்சுவார்த்தைகளை நடத்த முன்வர வேண்டும்'' என்று அமைச்சர் எஸ். தொண்டமான் தெரிவித்தார்.

அரசும் விடுதலைப் புலிகளும் பேச்சு நடத்தாதவரை ஓர் அமைதித்தீர்வு சாத்தியப்படாது என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையிலேயே அமைச்சர் இத்தகவல்களைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் பங்கேற்பும் ஆதரவும் இல்லாமல் இலங்கையில் சமாதானம் ஏற்படுவதற்குச் சாத்திய மேயில்லை.

சந்திரிகாவின் அரசியல் தீர்வுத் திட்டத்தில் விடுதலைப் புலிகள் பங்கேற்கவில்லை என்றால் இப்போதைய திட்டத்தை செத்துப் போன திட்டமாகவே கருதலாம்

பிரச்சினை மோசமாகி வருவதற்கு. அரசு— விடுதலைப்புலிகள் எத்தரப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் தாக்குதல்; மூன்று படையினர் பலி!

பாதுகாப்புப் படையினர் சென்ற டிராக்டர் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் மூன்று படையினர் கொல்லப்பட்டனர்.

திருகோணமலை மாவட்டம் நமுனுகல்வேவவுக்கு தெற்கே ஹல்கடவெவ என்னும் இடத்தில் நேற்றுமுன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவத்தை அடுத்து மேலதிக படைகள் அந்த இடத்துக்கு அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## நான்கு பொலீஸார் காயம்

மட்டக்களப்பு ஊறணி வடக்கில் பொலீஸ் ரோந்துப் படைக்கு அருகில் குண்டு ஒன்று வெடித்தபோது 4 பொலீஸார் காயமடைந்தார்கள்.

காயமடைந்த பொலீஸார் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்

(இ-3)

## சமாதானப் பேச்சுக்களை நிராகரிக்க முடியாது

### மலேசியாவில் கதிர்காமர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 2

''விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சு நடத்துவதனை நிராகரிக்க முடியாது''

இப்படி வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நேற்று முன்தினம் மலேஷியாவில் தெரிவித்தார்.

நாம் சமாதானக்கதவுகளை மூடிவிடவில்லை. பேச்சுவார்த்தை சாதகமான முறையில் தொடருவதற்கு விடுதலைப் புலிகள் முதலில் ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

'விடுதலைப் புலிகள் இயக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### ''லங்கா முடித''வில் வந்த

## தபாற் பொதிகள் இன்னும் இறக்கப்படவில்லை!

கடந்த மாதம் நடுப்பகுதியில் ''லங்கா முடித'' கப்பலில் காங்கேசன் துறைக்கு எடுத்து வரப்பட்ட தபால் பொதிகள் இன்னும் இறக்கப்படவில்லை.

இக்கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ள 300 தபால் பொதிகளும் இன்னும் சில தினங்களில் இறக்கப்பட்டு, எடுத்து வரப்பட்டு விநியோகிக்கப்படும் என்றும்—

தபால் பொதிகள் அடித்தளத்தில் இருப்பதால் தாமதம் ஏற்படுவதாகவும்— தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் தபால் திணைக்களத்துக்கான ''மெயில் வான்'' ஒன்றும், ஊழியர்களுக்கான 50 சைக்கிள்களும் இக்கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன. ஆனால் அவையும் இன்னமும் இறக்கப்படவில்லை.

(இ-3)

## அமுக்க வெடியில் மாட்டுவண்டி சிக்கி மூவர் அதேஇடத்தில் உயிரிழப்பு!

### குப்பிளானில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக. 2

பனை மரத்துண்டங்களை ஏற்றிச்சென்ற மாட்டு வண்டி ஒன்று அமுக்க வெடியில் சிக்கியது. அதனால் மூவர் அதே இடத்தில் உடல் சிதறி உயிரிழந்தனர். ஒருவர் படுகாயமடைந்தார். மற்றொருவர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிக் கொண்டார்.

வண்டியை இழுத்துச்சென்ற இரண்டு மாடுகளில் ஒன்றும் இறந்தது. மற்றது காயமடைந்தது.

வண்டி துண்டு துண்டாகச் சிதறி தூக்கி வீசப்பட்டது.

குப்பிளானில் நேற்றுக் காலை இச்சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் வண்டியில் சென்றவர்களான குப்பிளானைச் சேர்ந்த நல்லையா தங்கவடிவேல் (வயது 40), சபாரத்தினம் சர்வேஸ்வரன் (வயது 30), செல்லர் மணிமாறன் (வயது 20) ஆகிய மூவருமே உயிரிழந்தவர்களாவர்.

வண்டியை ஓட்டிச்சென்றவ

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண கிறிஸ்தவ ஒன்றியம்

03-08-96 சனிக்கிழமை நடைபெற இருந்த யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

செயலாளர்
வண. S. மில்ரன்

(42085)

---

வடமராட்சி
## தெற்கு, மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி

## கேள்வி விளம்பரம்

1996ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 21-ந் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிவரை தளபாடங்கள் தயாரித்து விநியோகிப்பதற்கான கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு உடனே கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர் சமூகமளிக்கலாம். கிரயப் பணமாக ரூபா **100/—** ஐயும் வைப்புப் பணமாக ரூபா **200/—** ஐயும் 19. 8. 96 திகதி மு. ப. 12.00 மணிவரை வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் செலுத்தி கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு காரியாலயத்தில் காரியாலய நேரத்தில் தொடர்பு கொள்ளலாம்.

செ. ஸ்ரீநிவாஸன்
விசேட ஆணையாளர்,
வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேசசபை,
கரவெட்டி.

31. 07. 1996 (C/2700)

---

## கண்ணீர் அஞ்சலி

### க. பாலச்சந்திரன்
(கட்டட ஒப்பந்ததாரர்)

எமது பாடசாலையின் பெற்றார் ஆகவும் பாடசாலையின் நலன்விரும்பியாகவும் இருந்து பாடசாலை அபிவிருத்திச் சங்க செயற்குழுவில் இணைந்து பாடசாலையின் அபிவிருத்திக்கான அரும்பணிகள் பல செய்த உம்மை நாம் என்றும் மறக்கமாட்டோம்.

உங்கள் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

அதிபர், ஆசிரியர்கள்,
பா.அ.சங்க உறுப்பினர்கள்,
பழைய மாணவர்கள்.

யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.

(42083)

---

விராட் விஸ்வப்பிரம்மனே நம
## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

தோற்றம்: 28 — 07 — 1945

மறைவு: 05 — 07 — 1996

''சிற்ப விற்பன்னர்''
### விஸ்வலிங்கம் கணேசமூர்த்தி
ஆச்சாரி அவர்கள்
(தலைவர் யா/ அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை பழைய மாணவர் சங்கம்)

அன்பின் திருவுருவாய், எம் குலவிளக்காய் விளங்கிய "சிற்ப விற்பன்னர்'' அச்சுவேலி விஸ்வலிங்கம் கணேசமூர்த்தி ஆச்சாரி அவர்கள் 05 - 07 - 96 அன்று எம் எல்லோரையும் கலங்க விட்டு சிவனடி சேர்ந்தார்.

அன்னாரின் அந்தியேட்டி - சபிண்டீகரணக்கிரியைகள் கீழ் வரும் கால அட்டவணையில் நிகழவுள்ளன.

அந்தியேட்டிக்கிரியைகள் **03-08 96** சனிக்கிழமை காலை 8 - 30 மணி

சபிண்டீகரணம் (வீட்டுக்கிருத்தியம்) **04 - 08 - 96** ஞாயிற்றுக்கிழமை காலை 10 – 30 மணி

மேற்படி கிரியைகளிலும் 04 – 08 - 96 ஞாயிற்றுக்கிழமை பகல் மதியபோசன விருந்திலும் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும் படி உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பு வரவை நாடும்;

திருமதி கணேசமூர்த்தி, சறோஜினிதேவி,
(மனைவி)
க. பாலமுரளி, க. கௌரிசங்கர்,
க. மகோதரன், க. மாலிகா.
(பிள்ளைகள்)

கலை அகம்,
அச்சுவேலி.

(41774)

---

## கலந்துரையாடல்

பல்கலைக்கழகங்களிலும், திறந்த பல்கலைக் கழகங்களிலும் கல்விகற்பவர்களும்—

புதிதாக தெரிவு செய்யப்பட்டவர்களும் —

கொழும்பு செல்வதற்கான ஒழுங்குகள் சம்பந்தமான கலந்துரையாடல் எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு (பழைய நேரம்) யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் நடைபெறும். (இ)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

## கலைப்பீடம்

பட்டப்பின் கல்வித்தகைமை நெறி
(முழுநேரம்/ பகுதிநேரம்)
கல்வியாண்டு 1994/95

பட்டப்பின் கல்வித் தகைமை நெறிக்குப் பதிவு செய்துள்ள மாணவ/மாணவிகள் (முழுநேரம்/ பகுதிநேரம்) அனைவரும் கல்வியியல் துறைத் தலைவரை 15 – 08 – 1996, வியாழக்கிழமைக்கு முன்னராகச் சந்திக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

பதிவாளர்
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்.
01-08-1996.

(சி/2702)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

### 1993/94 கல்வியாண்டு கலைப்பீடப் பரீட்சைகள்

முதற்கலை, முதல் வர்த்தகம், முதல் முகாமைத்துவம், முதல் சங்கீதம், முதல் நடனப் பரீட்சைகளும், முதலாண்டு சங்கீத, நடன டிப்ளோமாப் பரீட்சைகளும் ஆகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன. இதனைத் தொடர்ந்து இரண்டாம் வருட, மூன்றாம் வருட கலைப்பீட பரீட்சைகளும், இறுதியாண்டு பரீட்சைக்குத் தோற்றாத மாணவர்களுக்கான சிறப்புப் பரீட்சைகளும் இடம்பெறவுள்ளன. நேர அட்டவணை மற்றும் விபரங்களுக்கு பரீட்சைப் பகுதியுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

### விஞ்ஞானபீடப் பரீட்சைகள்

முதலாம், இரண்டாம் அரையாண்டு இரண்டாம் வருடப் பரீட்சைகளும் இடம் பெயர்ந்த மாணவருக்கான மூன்றாம் வருடப் பரீட்சைகளும் ஆகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாக உள்ளன. இதனைத் தொடர்ந்து மற்றைய பரீட்சைகள் இடம்பெறவுள்ளன. மேலதிக விபரங்களுக்குப் பரீட்சைப் பகுதியுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்.

(C/2699)

---

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
## திருவிழாக்கால தற்காலிக கடைகள் - 1996

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவ காலத்தில் தற்காலிக கடைகளை அமைக்க விரும்புவோர் மாநகரசபையின் நானாவித இறைவரிக்கிளையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

1. கேள்விப்படிவங்கள் வழங்கும் திகதி - **13 - 08 - 96**
2. கேள்விப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்திகதி - **14 - 08 - 96**

மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மாநகர. ஆணையாளர்.
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
01-08-96

(சி/2704)

---

## யூனிவேர்சல்
கந்தர் மடம், யாழ்ப்பாணம்.

### புதிய பிரிவு O/L
(துரித மீட்டல் வகுப்பு)

ஆரம்பம்:
**03–08–96** சனி மாலை 3-00 மணி

★ முன்னதாகவே அனுமதியை உறுதி செய்து கொள்ளவும்.

—நிர்வாகம்.

(42046)

---

## புதிய நாவலர் கல்வி நிலையம்
நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

### O/L 1996 - DEC. ஆண்டு 9, 10

**2** ஆவது புதிய பிரிவு
ஆரம்பம்:- **05–08–1996**
திங்கள் 3 மணி

இன்று யாழ். நகரில் மிகப் பிரபலம் வாய்ந்த ஆசிரியர் குழுவின் ஒன்றிணைந்த சேவை.

கணிதம் — திரு. B. கிருபாகரன்
விஞ்ஞானம் — திரு. P. தயாநிதி
— திரு. T. S. குணாளன்
வரலாறும் சமூகக்கல்வியும் — திரு. K. S. முத்துலிங்கம்
தமிழ் — திரு. திருஞானம்
— திரு. W. ஜெயபசல்
ஆங்கிலம் — திரு. E. R. ஆசீர்வாதம்
வர்த்தகம் — திரு. E. ஜீவா

★ விரும்பிய பாடங்கள் எடுப்பதற்கு அனுமதி வழங்கப்படும்.

★ அனுமதிகளை **05—08—96** க்கு முன் பெற்றுக் கொள்ளவும்.

(42086)

---

## மரண அறிவித்தல்

திருமதி
### இரத்தினசவுந்தரி தருமலிங்கம்

முல்லைத்தீவைப் பிறப்பிடமாகவும், இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினசவுந்தரி தருமலிங்கம் 01 - 08 - 96 அன்று காலமானார்.

அன்னார் முத்தையா — இராசம்மா தம்பதிகளின் புதல்வியும், இமையாணன் உடுப்பிட்டியைச் சேர்ந்த தருமலிங்கத்தின் மனைவியும், ரட்ணலிங்கம் (U.K), தேவரமணி, தவலிங்கம் (U.K), சக்தி (U.K) ஆகியோரின் தாயாரும், தங்கராணி, சாந்தினி ஆகியோரின் மாமியாரும், சசுஸ்திரா, சுஷந்திரா, ஜனனி, ஸ்ரீபிரசன், ஸ்ரீசைலன் ஆகியோரின் பேர்த்தியும், செல்லபாக்கியம், முத்துராணி, கதிரவேல், துரைராசா, மகாலக்ஷ்மி, சுகிர்தா, சிவா, தேவகி ஆகியோரின் மைத்துனியும், சுப்பிரமணியம், பொன்னுத்துரை ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02-08-96) காலை 10 மணிக்கு திருநெல்வேலி செம்பாட்டு மயானத்தில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
த. ரமணி
(மகள்)

9, சங்கிலியன் வீதி,
நல்லூர்.

(42084)

# புருண்டி மீது பொருளாதாரத்தடை ஆபிரிக்கத் தலைவர்கள் இணக்கம்

நைரோபி, ஓக. 2

புறூண்டியில் கடந்தவாரம் இராணுவம் ஆட்சியைப்பிடித்ததையடுத்து அந்நாட்டின் மீது பொருளாதாரத்தடைகளை விதிக்க கிழக்கு மற்றும் மத்திய ஆபிரிக்காவின் அரசியல் தலைவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

தன்சானியாவில் அராஹா நகரில் கூடிய இந்த தலைவர்கள், தமது இந்த நடவடிக்கைக்கு ஆதரவு வழங்குமாறு அனைத்துலக சமுதாயத்துக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளதுடன் ஹூட்டு இனக் கிளர்ச்சிக்காரர்களுடன் உடனடியாக நிபந்தனைகள் அற்ற பேச்சுவார்த்தைகளை நடத்தும்படி புறூண்டியின் ருட்சி இன புதிய ஆட்சியாளர்களை வேண்டியுள்ளனர்.

புறூண்டியின் புதிய தலைவரான சிறுபான்மை ருட்சி இனத்தைச் சேர்ந்த மேஜர் பியாயவோ மிதவாதி எனக் கருதப்படும் பெரும்பான்மை ஹூட்டு இனத்தவர் ஒருவரை பிரதமராக நியமித்திருக்கும் இவ்வேளையில் இந்த செய்தி வந்திருக்கிறது.

இதேவேளை — புறூண்டியில் இருந்து வெளியேறும் அகதிகளின் எண்ணிக்கை திடீரென அதிகரித்திருப்பதாக நிவாரண நிறுவனங்கள் கூறுகின்றன.

வடமேற்கு புறூண்டியில் உள்ள நெருக்கடி நிலவும் கிபிடோக் மாகாணத்தில் இருந்து நாளொன்றுக்கு ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் லிஸ்பென் நகரை வந்து சேர்வதாக ஐ. நா. தெரிவித்தது.

ருட்சி இன மக்களைக் கூடுதலாகக் கொண்ட இராணுவத்துக்கும், புறூண்டி நாட்டு ஹூட்டு கிளர்ச்சிக்காரர்களுக்கும் இடையே கடும் சண்டை நடைபெறுவதாக இந்த அகதிகள் கூறுகின்றனர். (இ-3)

## ஹாக்கியில் புதிய விதிகளை சேர்க்க முடிவு

அட்லாண்டா, ஓக. 2

அட்லாண்டா ஒலிம்பிக் போட்டிகள் முடிவடைந்ததும் ஹாக்கி விளையாட்டில் புதிய சில விதிமுறைகள் அமுலுக்கு வருகின்றன.

இதன்படி 'ஓவ்சைட்' விதி அகற்றப்படுகின்றது.

ஆட்டம் சமநிலையில் முடிந்து, மேலதிக நேரம் வழங்கப்பட்டு, அந்நேரத்தில் முதல் கோலை யார் அடிக்கிறார்களோ அத்தோடு விளையாட்டு முடிந்துவிடும். (இ-10)

அட்லாண்டிக் கடலில்

## சடலங்களைத் தேடும் பணி தொடருகிறது

கடந்த வாரம் நியூயோர்க் விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட சிறிது நேரத்தில் வெடித்து அட்லாண்டிக் சமுத்திரத்தில் விழுந்த ரி.டபிள்யு.ஏ. விமானப் பயணிகளின் சடலங்களைத் தேடும் பணி தொடருகிறது.

லோங் தீவுக்கு அண்மையில் இதுவரை 161 உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இந்த விமானத்தில் சிப்பந்திகள் உட்பட 230 பேர் பயணம் செய்தனர். எவருமே உயிர் தப்பவில்லை. (இ-10)

## பாகிஸ்தானுக்கு ரஷ்ய டாங்கிகள்

கராச்சி, ஓக 2

ரஷ்யாவின் உக்ரைனிடம் இருந்து 1930 கோடி ரூபா மதிப்புடைய 320 டாங்கிகளை பாகிஸ்தான் வாங்குவதற்கான ஒப்பந்தம் ஒன்று இஸ்லாமாபாத்தில் நேற்று முன்தினம் கைச்சாத்தானது (இ-3)

ஆந்திராவில்

## லக்சுமி பார்வதி கட்சியுடன் பாரதீய ஜனதா கூட்டு

திருவனந்தபுரம், ஓக. 2

ஆந்திரமாநிலத்தில் தெலுங்குதேசக் கட்சியின் லக்சுமி பார்வதியின் அணியுடன் கூட்டணி அமைக்க பாரதிய ஜனதாக்கட்சி முடிவு செய்துள்ளது.

ஆந்திரப்பிரதேச முன்னாள் முதல்வர் என்.டி. ராமராவின் மனைவி லக்சுமி பார்வதியின் தலைமையிலான தெலுங்குதேசக் கட்சியுடன் பாரதீய ஜனதாக் கட்சி நடத்திய பேச்சுக்கள் பலன் அளித்ததையடுத்து விரைவில் இரு கட்சிகளுக்கும் இடையில் கூட்டணி அமைய விருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## நடராஜனுக்குப் பிணை

சென்னை, ஓக. 2

தாக்குதல் சம்பவம் ஒன்று தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நடராஜனை நிபந்தனையுடன் பிணையில் செல்ல சென்னை நீதிமன்றம் நேற்று முன்தினம் அனுமதித்தது.

10 ஆயிரம் ரூபா சரீரப் பிணையுடன்—

வெளிநாடு செல்லாமல் கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தும் — பிணையில் செல்லலாம் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது

நடராஜனின் மனைவியும், ஜெயலலிதாவின் நெருங்கிய தோழியுமான சசிகலா கடந்த ஜூன் மாதம் செயலாக்கல் பிரிவில் ஆஜராகச் சென்ற சமயம் பத்திரிகையாளர்களையும், பத்திரிகை படப்பிடிப்பாளர்களையும் தாக்கினார் என்ற குற்றச்சாட்டில் நடராஜன் நீதிமன்றத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்தார். (இ-3)

## உள்ளூராட்சித் தேர்தலிலும் கூட்டணி தொடரும்

### மூப்பனார் தெரிவிப்பு

கும்பகோணம், ஓக 1

தமிழகத்தில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்களிலும் தி. மு. கவுடன் கூட்டணி நீடிக்கும் என்று தமிழ் மாநில காங்கிரஸ் தல்லவர் ஜீ. கே. முப்பனார் கும்பகோணத்தில் தெரிவித்தார்.

தொகுதி உடன்பாடுகள் பற்றி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை எனவும் அவர் கூறினார்.

அண்மையில் நடந்த நாடாளுமன்ற மற்றும் மாநில தேர்தல்களில் இவ்விரு கட்சிகளும இணைந்து போட்டியிட்டதும் தேர்தலில் அமோக வெற்றி பெற்று மாநிலத்தில் ஆட்சி அமைத்ததும் தெரிந்ததே. (இ-10)

## படகு விபத்து

அஸாமின் வட-கிழக்குப் பகுதியில் உள்ள நதி ஒன்றில் 70 பேரை ஏற்றிச் சென்ற படகு ஒன்று மூழ்கியதில் 5 பேர் இறந்தனர் 50 பேர் காணாமற் போயுள்ளனர். (இ-3)

## ஆசப்அலி காலமானார்

புதுடில்லி, ஓக. 2

இந்தியாவின் முதுபெரும் விடுதலைப் போராட்ட வீராங்கனை திருமதி அருணா ஆசப்அலி தனது 86 ஆவது வயதில் காலமானார்.

இவர் தேசிய ஒருமைப்பாட்டுக்கான இந்திராகாந்தி விருது, நேரு விருது, லெனின் சமாதான விருது, பத்மவிபூசன் விருது ஆகிய விருதுகளைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# உலக அரங்கில்

## வட அயர்லாந்து பேச்சு மீண்டும் ஆரம்பிக்க முயற்சி

வட அயர்லாந்துப் பிரச்சினை தொடர்பாக மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் முயற்சிகளை அமெரிக்க முன்னாள் செனட்டர் ஜோர்ஜ் மிச்சேல் மேற்கொண்டுள்ளார்.

வட அயர்லாந்தில் 60 சதவீதமானோர் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்கள் 40 சதவீதமானோர் கத்தோலிக்கர்கள்.

வட அயர்லாந்தை ஐரிஷ் குடியரசுடன் இணைக்க வேண்டும் என்று கத்தோலிக்கர்கள் கோருகின்றனர்.

இதற்காக ஐ.ஆர்.ஏ. எனப்படும் ஐரிஷ் குடியரசு ராணுவம் போராடிவருகிறது.

பிரிட்டிஷ் அரசுடன் செய்து கொண்ட யுத்த நிறுத்தத்தை கடந்த பெப்ரவரி மாதம் ஐரிஷ் குடியரசு ராணுவம் முறித்துக் கொண்டது.

அன்றிலிருந்து குண்டு வெடிப்புக்கள் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன.

சமாதானப் பேச்சின் போது ஐரிஷ் குடியரசு ராணுவம் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என்று பிரிட்டன் கோரியது. ஐரிஷ் குடியரசு ராணுவம் இதனை எதிர்த்தது யுத்த நிறுத்தம் முறிவடைய இதுவே காரணமாக இருந்தது. (இ)

## தமிழ்நாடு - கர்நாடக முதல்வர்கள் சந்திப்பர்

சென்னை, ஓக. 2

உச்ச நீதிமன்ற உத்தரவின்படி தமிழ்நாட்டுக்கு காவிரியின் தண்ணீரை விடுவிப்பது குறித்து பேச்சுக்கள் நடத்துவதற்காகத் தமிழ்நாடு — கர்நாடக மாநிலங்களின் முதலமைச்சர்கள் கூட்டம் நடைபெற உள்ளது.

இந்த கூட்டத்துக்கான திகதியை நிர்ணயிப்பதற்காக கர்நாடாக அரசு தமிழக அரசுடன் தொடர்பு கொண்டுள்ளது.

கர்நாடகமுதலமைச்சர்ஜே. எஸ். பட்டேல் தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதிக்கு இதுவிடயமாக தகவல் அனுப்பியதாகவும்—

மு. கருணாநிதி அதற்கு ''பக்ஸ்'' மூலம் பதில் அனுப்பியுள்ளதாகவும்—பேச்சுநடக்கும் திகதி இடம் பற்றி விரைவில் முடிவு செய்யப்படும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## பலஸ்தீனருக்கு தனிநாடு வழங்க ரகசிய ஒப்பந்தம்

### ரபீன் தயாரித்திருந்தாராம்

ஜெருசலம், ஓக. 2

முன்னாள் இஸ்ரேலின் பிரதமர் ரபீன் கொலை செய்யப்படுவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்ப பலஸ்தீனர்களுக்கு தனிநாடு வழங்கும் இரகசிய ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடும் தறுவாயில் இருந்தது என இஸ்ரேலிய வெளிவிவகார உயர் அதிகாரி யாயிர் தெரிவித்தார்.

இஸ்ரேலின் கைவசம் இருக்கும் மேற்குக்கரையில் 90 சதவீதமானவற்றை பலஸ்தீனர்களுக்குத் திரும்ப அளிப்பதாகவும்— ஜெருசலத்தின் புறநகர்ப்பகுதியில் உள்ள அபூபிஸ் என்ற மாவட்டத்தை ஜெருசலம் எனப் பெயர் மாற்றி தலைநகராக்குவது என்றும்— அந்த ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டிருந்ததாம்.

யூத தீவிரவாதி ஒருவரால் ரபீன் சுட்டுக்கொல்லப்பட்டது தெரிந்ததே. (இ-3)

## உலக வலம்

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஜில்பட் ஹெமோன் என்பவர் 7 நாடுகளை தனது சைக்கிளால் கடந்து சீனாவுக்கு நேற்று முன்தினம் வந்து சேர்ந்தார்.

நம்பிக்கையின் செய்தியைக் கொண்டு வந்ததாகக் கூறும் அவர் 4 ஆயிரம் கிலோ மீற்றர்களை 7 மாதங்களில் கடந்துள்ளார். (இ-3)

காவலில் பலியானோரின்

## பிரேத பரிசோதனையை வீடியோஎடுக்க வலியுறுத்து

சென்னை ஓக. 2

பொலீஸ் காவலில் இருக்கும் போது உயிரிழப்பவர்களின் பிரேத பரிசோதனையின் போது அதனை வீடியோப்படம் எடுக்கவேண்டும்.

அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளை இந்தியத் தேசிய மனித உரிமை ஆணைக்குழு மேற்கண்டவாறு கேட்டுக் கொண்டிருக்கின்றது.

பொலீஸ் காவலில் இடம்பெறும் மரணங்களை வேண்டும் என்றே மறைக்கும் சம்பவங்கள் அடிக்கடி நடப்பதாகக் கூறப்படுவதை அடுத்தே இக்கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது.

பதின்மூன்று மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேச அரசுகள் இக் கோரிக்கையை ஏற்றிருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டது.

பொலீஸ் காவலில் இருக்கும் போது உயிரிழந்தவர்களின் பிரேத பரிசோதனைகள் திருப்திகரமான முறையில் நடத்தப்படாததை தேசிய மனித உரிமை ஆணைக்குழு அடிக்கடி அவதானித்து வந்துள்ளதாகவும் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரேத பிரிசோதனை அறிக்கையில் தில்லுமுல்லுகள் இடம்பெற்றதாகவும் குற்றசாட்டுக்கள் வந்துள்ளன.

## சீனாவில் பெருவெள்ளம்

லண்டன், ஓக. 02

சீனாவின் தெற்கு மற்றும் மத்திய பகுதிகளில் பெய்துள்ள கடும் மழையினாலும் அங்கு ஏற்பட்டுள்ள பெருவெள்ளத்தினாலும் ஆயிரத்து ஐநூறுக்கும் அதிகமானோர் உயிரிழந்திருப்பதாக அஞ்சப்படுகின்றது; லட்சக்கணக்கான மக்கள் இந்த வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்; பல்லாயிரம் கோடி டொலர் பெறுமதிக்கு உடைமைகள் அழிந்துள்ளன

அவசர நிவாரண உதவிகளை வழங்குமாறு சீனச் செஞ்சிலுவைச் சங்கம் உலக நாடுகளிடம் அவசர கோரிக்கை விடுத்திருக்கிறது. (உ)

## தெருநாயை பொசுக்கி உண்ட ரஷ்ய சிறுவர்கள்

### சுகயீனமுற்று மருத்துவ மனையில்

மாஸ்கோ, ஓக. 2

ரஷ்யாவில் பசியால் வாடிய 9 சிறுவர்கள் தெருநாய் ஒன்றைப் பிடித்து பொசுக்கி உண்டனராம்;

இதனை உண்ட பின்னர் நோய்வாய்ப்பட்டு அவர்கள் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர் என்றும்—

கடந்த 6 மாதங்களாக சம்பளம் தரப்படாமல் வறுமைக்கு ஆளாகியுள்ள 12 ஆயிரம் சுரங்கத்தொழிலாளர்களின் குடும்பத்தைச் சார்ந்தவர்களே இந்தச்சிறுவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

முருகேசு அரியமலர் (அம்மன் வீதி, பண்டத்தரிப்பு) ஆகிய எனது 397970116V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை 31-07-96 அன்று யாழ் பஸ்தரிப்பு நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 674, பருத்தித்துறை வீதி, நல்லூர் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (41758)

எனது மணிவிழாவை பதிவு செய்து வைத்திருந்த ஆறு ஒலி நாடாக்களும், பட அல்பமும் இடம் பெயர்ந்த போது தவறிவிட்டன. எம்மிடம் கொடுத்தால் சன்மானம் வழங்கப்படும். லயன் செ. துரைசிங்கம் 64, புவனேஸ்வரி வீதி, அரியாலை மேற்கு யாழ்ப்பாணம். (41775)

### தேவை

வேலை பழகுகின்ற ஆள்கள் பக்ரரிக்குத் தேவை. கடித மூலம் தொடர்பு கொள்ளவும். சிவன் மாளிகை, மாரி அம்மன் லேன், திருநெல்வேலி தெற்கு. (42008)

காது கேட்கும் கருவி (HEARING AID) விற்க விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும். இல- 509, மே/பா உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். (41766)

### விற்பனைக்கு

நல்லின 1½ மாத Dash hound பெண் நாய்க் குட்டிகள் இரண்டு. முட்டையிடும் கினிக்கோழிகள் உடன் விற்பனைக்கு உண்டு. திரு. கேதீஸ்வரன், இல. 27 (B- 238), 1 ம் ஒழுங்கை, சங்கத்தானை, சாவகசசேரி. (இந்துக் கல்லூரிக்குப் பின்னால் (41765)

பாவித்த கடை விறாக்கையும், கண்ணாடி சோக்கேஸ்சும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 92, பலாலி வீதி, தபால் பெட்டி சந்தி, திருநெல்வேலி. (41770)

### தட்டெழுத்து வகுப்பு

தட்டெழுத்து, சுருக்கெழுத்து (ஆங்கிலம், தமிழ்) வகுபபுக்கள் மீண்டும் நடைபெறுகின்றன. தொடர்பு:- ஆசிரியை, தலங்காவில் பிள்ளையார் வீதி, திருநெல்வேலி தெற்கு, திருநெல்வேலி. (41768)

### விற்பனையாகிறது

ஆசிரியர் கந்தையா ஸ்ரீகந்தவேளின் நாடகமும், அரங்கியலும், கடந்தகால வினாத் தொகுப்புக்களும், எதிர்பார்க்கை வினா விடைகளும், விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, இல,4 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி/2701)

### வாடகைக்கு

நல்லூர் கந்தன் வருடாந்த திருவிழா நாள்களில் குளிர்பானக்கடை, தேநீர்க்கடை நடத்துவதற்கான இடமும், துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு செய்வதற்கான இடமும் மேற்கு வீதி தடையை அண்டிய பிரசித்தி பெற்ற இடத்தில் வாடகைக்கு கொடுக்கப்படும். தொடர்பு: இ. கிருஷ்ணமூர்த்தி, விலைமதிப்பீட்டுத் திணைக்களம், 148, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (41773)

### ஆங்கிலம், கணிதம்

Distinction, Credit பெறுபேறடைய (ஆண்டு 10,9 உட்பட) கற்பிக்கப்படும். 10 வருட Paper Classes தினமும் பகல் 8 –12, பின்னேரம் 3 - 6 வரை, London Inter ஆசிரியர் 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி. (41776)

---

## நிரு ரியுசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்

**O/L DAY CLASS**

ஆரம்பம்:— 05 - 08 - 96

திங்கள் காலை 8 மணி

நிர்வாகி

(C/2693)

---

## அறிவித்தல்

### குகன் ஸ்ருடியோ ஸ்தாபனம்

பொது மக்கள் வசதி கருதி 2ஆம் குறுக்குத் தெருவில் பருத்தித்துறை தபாற்கந்தோருக்கு கிழக்கு முகமாகப் போகும் றோட்டில் 31.7.96 இல் இடம் மாறியுள்ளது.

குகன் ஸ்ருடியோ,
பருத்தித்துறை.

(சி-2697)

---

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

**O/L**

பிரிவு II — Day Class (8-30 — 2-00)

பிரிவு I — Sat. Sun. Class (8-00 — 2-00)

பிரிவு II — Evening Class (3-00 — 4-30)

ஆரம்பம்: **05 – 08 – 1996**

| | |
|---|---|
| விஞ்ஞானம் | — திரு. ராஜ்தேவன் |
| கணிதம் | — திரு. தயாளன், செபஸ்தியான் |
| சமூகக்கல்வி வரலாறு | — திரு. கோபி |
| ஆங்கிலம் | — திரு. விஸ்வநாதன் |
| தமிழ் | — திரு. திருஞானம், தயாளன் |
| சமயம் | — திரு. சங்கர் |
| கிறிஸ்தவம் | — திரு. டார்வின் |
| வர்த்தகம் | — திரு. கருணாகரன் |

ஆண்டு **10, 9, 8, 7, 6.**

புதிய பிரிவுகள் ஆரம்பமாகிவிட்டன.

(41755)

---

## 25-ம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் பராசக்தி செல்லப்பா
(கனகமுத்து)

தோற்றம்: 05 – 12 – 1910    மறைவு: 02 – 08 – 1971

திதி: 24 - 08 - 96

பண்பான வாழ்க்கைத் துணைவியாய், பாசமிகு அன்னையாய், அரிய சகோதரியாய், எல்லோருக்கும் உறுதுணையாய், வாழ்வாங்கு வாழ்ந்து சிவன் திருவடி சேர்ந்து விட்டாய். இன்றும் என்றும் உன் நினைவு எங்கள் நெஞ்சை விட்டு நீங்காது.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கணவன், பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி. (41762)

---

## O/L DAY CLASSES

ஆரம்பம்: **05 - 08 - 96** 8-00 மணி

**O/L** (Sat. Sun) **96** Dec.

வகுப்புக்கள் ஆரம்பம்: **10 08-96** 9 மணி

அனுமதிகளை இருகாரியாலயத்திலும் முன் கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

### புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

### கலை வர்த்தகக் கல்லூரி
(C. C. A)

(42037) நிர்வாகி

---

## பிறைற்வே இன்ஸ்ரிரியூட்

முத்தவிநாயகர் கோவிலடி, ஆனைக்கோட்டை

**AL 98, 97**

ஆரம்பம்: **03 – 08 – 96** பி. ப. 3 - 00 மணி

அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்

இந்து சமய பாட ஆசிரியர்
கிராம உத்தியோகத்தர்,
பதவிக்கான பரீட்சைக்குரிய வகுப்புக்கள்
பிரிவு II

ஆரம்பம்: **05 - 08 - 96** பி. ப. 3-00 மணி

ஆசிரியர் - குமாரவேல்

விவரங்கள் நிர்வாகி
S. அருள்நங்கை

(42036)

---

சாவகச்சேரி பிரதேச சபை

## மூலதன அபிவிருத்தி வேலைத் திட்டம் - 1996
## கேள்வி விளம்பரம்

மேற்படி வேலைத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட பின்வரும் வேலைகளுக்கான கேள்விகள் **1996-08-16** ஆம் திகதி மு. ப. 10-00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப்படிவங்கள் சாவகச்சேரி பிரதேச சபை தலைமைப் பணிமனையில் **1996-08-13** ஆம் திகதி நண்பகல் 12-00 மணிவரை மீளளிக்க முடியாத கேள்விப் பத்திரக் கட்டணம் ரூபா 200/-ம், மீளளிக்கப்படக்கூடிய கேள்வி வைப்புப்பணம் ரூபா 500/-ம் செலுத்துவதன் பேரில் அரச திணைக்களங்களில் ரூபா 1,00000/- குறையாத தொகைக்கு பதிவு செய்த ஒப்பந்தகாரர்கள், பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் ஆகியோருக்கு வழங்கப்படும். ஒரு ஒப்பந்தகாரருக்கு ஒரு வேலையே வழங்கப்படும்.

கேள்விப்படிவங்கள் விசேட ஆணையாளர், சாவகச்சேரி பிரதேச சபை, சமநல சேவை நிலையக் கட்டடம், கொடிகாமம் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரை இடப்பட்ட தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது அதற்கென வைக்கப்பட்ட கேள்விப் பெட்டியில் உரியநேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இது சம்பந்தமான நிபந்தனைகளையும், மேலதிக விவரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம் கேள்விகள் **1996-08-16** ஆம் திகதி பி. ப 2-00 மணிக்கு திறக்கப்படும். அவ்வமயம் கேள்விகள் சமர்ப்பித்தவர்கள் சமூகமளிக்கலாம்.

### வேலையின் பெயர்

01. வயல்கரை வீதி புனரமைப்பு, மீசாலை.
02. நவபுரம் சந்திரபுரம் இணைப்பு வீதி, கைதடி வடக்கு.
03. மரக்கறிச் சந்தைக் கொட்டகை அமைத்தல், கைதடி.
04. கொடிகாமம் சந்தைக் கொட்டகை அமைத்தல்.
05. மலசலகூடம் அமைத்தல், எழுதுமட்டுவாள்.
06. ஆயுர்வேத வைத்தியசாலை புனரமைப்பு, கச்சாய்.
07. கைதடி தெற்கு மாதாசிசு பரிபாலன நிலைய மலசலகூடம், கைதடி.
08. தளபாடம் வழங்கல் ஆயுர்வேத வைத்தியசாலை, வரணி.
09. பொது மலசலகூடம் அமைத்தல், மட்டுவில் நுணாவில்.
10. குழாய்க்கிணறு அமைத்தல், கைதடிச் சந்தி.
11. கிணறு அமைத்தல், எழுதுமட்டுவாள் வடக்கு.
12. கிணறு அமைத்தல், கச்சாய் பொதுநூலகம்.
13. கிணறு அமைத்தல், தெற்பேளி.

பு. சுந்தரம்பிள்ளை
விசேட ஆணையாளர்,
சாவகச்சேரி பிரதேச சபை.

சமநல சேவை நிலையக் கட்டடம்,
மீசாலை வடக்கு,
கொடிகாமம். 31-07-1996 (சி-2698)

உதயன்

## அணு ஆயுத ஒழிப்பு

அணு ஆயுத சோதனையைத் தடை செய்வதற்கான உலக ஒப்பந்தம் ஒன்றை உருவாக்குவதற்கான முயற்சிகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

இது சம்பந்தமான இரண்டாவது கட்டப் பேச்சு இப்போது ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவில் நடைபெற்று வருகிறது. இது சம்பந்தமான மாநாட்டில் அறுபத்தொரு நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு அணு ஆயுத சோதனையைத் தடை செய்வது குறித்து ஆராய்கின்றனர்.

சாதாரண அணுக்கதிர் வீச்சினால் அல்லது ஒழுக்கினால் ஏற்படக்கூடிய பயங்கர விளைவுகள் மனித வாழ்க்கையில் பெரும் பாதிப்புக்களை உண்டாக்கி வருகின்றன ரஷ்யாவின் செர்பினோபிலில் அணு உலைக் கசிவினால் மக்கள் மாண்டது இதற்கு ஒரு சிறிய உதாரணம்.

அணு ஆயுதங்கள் மற்றும் அணு வெடிப்புச் சோதனைகள் உலகத்தின் சகல சிவராசிகளையும் பூண்டோடு அழித்து அந்தமில்லாத அனர்த்தம் விளைவிக்கக்கூடியவை. ஆகையால் இவற்றுக்கு முழு அளவிலான பரிபூரண தடை கொண்டு வரப்படுதல் மிகக் கட்டாயமானது.

மனிதன் மட்டுமன்றி உலகமே இயங்குவதற்கு இந்தத் தடை மிக மிக அவசியம் என்பதனை அனேகமாக எல்லா நாட்டு மக்களும் இப்போது உணர்ந்துள்ளனர். அதனையே வலியுறுத்தியும் வருகின்றனர்.

அணு ஆயுத பாவனை மற்றும் அணு வெடிப்புச் சோதனைகளின் ஆபத்தை உணர்ந்து அவற்றைக் குறைக்கும் ஒப்பந்தங்கள் ஏற்கனவே நடைமுறையில் உள்ளன. ஆனால் பூரண தடைக்கு இன்னும் வகை செய்யப்படவில்லை.

இப்போது கூட, அணு ஆயுதங்களுக்குப் பூரண தடை விதித்தல், முற்றாக அழித்தல் என்ற நிலையில் இருந்து நழுவிக் கொள்ளவே அணு ஆயுத வல்லரசுகள் முயல்கின்றன.

[?] கடந்த மாதத்தில் தயாரிக்கப்பட்ட விரிவான அணு வெடிப்புத் தடை ஒப்பந்த (C.T.B.T.) வடிவத்தில் —

அணு ஆயுதங்களை வைத்திருக்கும் அனைத்து நாடுகளும் குறிப்பிட்ட காலத்திற்குள் தமது ஆயுதங்களை முற்றாக ஒழிக்க வேண்டும் —

அனைத்து வகையான அணு ஆயுத சோதனைகளும் முற்றாகத் தடை செய்யப்பட வேண்டும் — என்ற சரத்துக்கள் சேர்க்கப்படவில்லை என்பது இந்தியாவின் வாதமாக உள்ளது.

இது முற்றிலும் நியாயமானதே. அரை குறை அல்லது அரை வேக்காட்டு ஒப்பந்தங்களால் பயனில்லை. அணு ஆயுதத் தடை என்ற பெயருக்காக ஒப்பந்தம் எதற்கு?

அணு ஆயுத வல்லரசுகள் மனவிருப்பம் இன்றி உலக மக்களை ஏய்க்காட்டும் விதத்தில், ஏமாற்றும் விதத்தில் தமது நலனை நாடி ஏனைய நாடுகளை நிர்ப்பந்தித்து அரைகுறை ஒப்பந்தங்களை இயற்றுவதற்கு முயலக்கூடாது.

செய்வன திருந்தச் செய்ய வேண்டும். உலக அழிவுக்கு வழிகோலக்கூடிய அணு ஆயுதங்களை முற்றாக அழித்து, அவற்றால் உண்டாகக் கூடிய பிரளயங்களைத் தடுக்க, அந்தஸ்து பேதம், ஏற்றத் தாழ்வு கருதாமல் சகல உலக நாடுகளும் முன்வரவேண்டும்.

# பளைப் பிரதேச பாடசாலைகளில் மாணவரின் கல்வி சீரழிகிறது

## அதிபர்கள், ஆசிரியர்கள் கடமைக்குத் திரும்பவில்லை

தென்மராட்சி, ஓக. 2

பளை மத்திய கல்லூரி உட்பட பளைப்பிரதேசத்தில் உள்ள பல பாடசாலைகளின் அதிபர்கள் ,ஆசிரியர்கள் இதுவரை தமது கடமைக்கு திரும்பவில்லை. இதனால் மாணவர்களின் கல்வி சீரழிவதாக பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பளை மத்திய கல்லூரியில் 47 ஆசிரியர்கள் உள்ள போதிலும் தற்போது 7 ஆசிரியர்களே கடமையாற்றுகின்றனர்.

ஆசிரியர்கள் பற்றாக்குறை காரணமாக கிளாளி றோமன் கத்தோலிக்க பாடசாலை, மாசார் அ. த. க. பாடசாலை, புலோப்பளை றோ. க. பாடசாலை ஆகியவை மூடப்பட்டு இவற்றின் ஆசிரியர்கள் பளை மத்தியகல்லூரியில் கடமையாற்றுகின்றனர்.

பளை மத்திய கல்லூரியில் தமிழ், சமயம், கணிதம் ஆகிய பாடங்கள் மட்டுமே போதிக்கப்படுவதாகவும்—

ஏனைய பாடங்களுக்குரிய ஆசிரியர்கள் இன்னமும் கடமைக்குத் திரும்பவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அதே சமயம் இத்தாவிலில் இயங்கிய இயக்கச்சி அ. த க. மற்றும் வேம்போடு கேணி சி. சி. த. க. பாடசாலைகளின் ஒரு பகுதி ஆகியவற்றின் வகுப்பறைத் தொகுதிகள் எரிக்கப்பட்டு விட்டதால் இந்த இரு பாடசாலைகளின் மாணவர்கள் வேம்போடு கேணி சி. சி. த. கபாடசாலையில் கல்வி கற்கின்றனர்

(இ-117)

## ஆயிரம் தொலைபேசி இணைப்புகள்

கொழும்பு, ஓக. 2

யாழ்ப்பாண குடாநாட்டுக்கு தொலைபேசி வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் ஆயிரம் இணைப்புக்களை வழங்கக்கூடிய பரிவர்த்தனை உபகரணங்கள் அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று தபால் தந்தி தொலைத் தொடர்புகள் பிரதி அமைச்சர் எம். எல். எம்ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

## கோப்பாய்ப் பகுதிக்கான விசேட அடையாள அட்டை

### நாளை முதல் விநியோகம்

யாழ்ப்பாணம் ஓக 2

வலி கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் வளலாய், இடைக்காடு, தம்பாலை கதிரிப்பாய், பத்தைமேனி, அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி மேற்கு, அச்சுவேலி தெற்கு, ஆவரங்கால் கிழக்கு, ஆவரங்கால் மேற்கு, புத்தூர் வடக்கு நவக்கிரி ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ளவர்களுக்கான விசேட அடையாள அட்டைகள் நாளை சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் ஆவரங்கால் மேற்கு கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் வைத்து விநியோகிக்கப்படும்.

அடையாள அட்டை கிடைக்கப் பெற்றவர்களின் பட்டியல்கள் சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் —

எனவே சம்பந்தப்பட்டவர்கள் தமது கிராம உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொண்டு தமது பெயர்களை உறுதிப்படுத்தியபின் குறிப்பிட்ட திகதியில் சென்று தமது அட்டைகளைப் பெற்றுக் கொள்ளும்படியும் — கோரப்பட்டுள்ளது.

(இ)

## அரசின் பொருளாதாரக் கொள்கைக்கு கண்டனம்

கொழும்பு, ஓக. 2

"உலக வங்கி, மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகியனவற்றின் ஆலோசனைகளுக்கு இணங்க அரசாங்கம் நிவாரணங்களை வெட்ட அல்லது குறைக்க முயற்சிப்பதை அவதானிக்க முடிகிறது. அப்படி நடந்தால் மக்கள் வாழ முடியாத நிலை தோன்றி இறக்கும் நிலை உருவாகும்.''

முன்னாள் நிதி அமைச்சர் றொனி டிமெல் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

திறந்த பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப் படுத்தி வரும் ஒரு நாட்டில் அரசு பொருளாதார விடயமாக எடுக்கும் முடிவுகளை மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (இ)

## ஆசிரியர் பயிற்சி கல்லூரிகளின் அதிபர்கள்

கொழும்பு, ஓக. 2

பலாலி ஆசிரிய கலாசாலையின் அதிபுராக திரு. சோ பத்மநாதனும், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் அதிபராக கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளையும் நியமிக்கப்பட்டிருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்விரு கல்லூரிகளிலும் தற்சமயம் இரு பதில் அதிபர்கள் பணிபுரிந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

## குருநகர் மீனவருக்கு அடையாள அட்டை

குருநகர் ஓக. 2

குருநகர்ப் பகுதியில் இருந்து மட்டுப்படுத்தப்பட்ட நேரத்தில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கத்தினால் மீனவர் அடையாள அட்டைகளும் அனுமதி அட்டைகளும் வழங்கப்பட்டு வருவதாக குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த அனுமதி அட்டைகள் நாளாந்தம் சங்கத்தில் புதுப்பிக்கப்பட வேண்டும் என்றும் —

சுமார் 650 மீனவர்களுக்கு மீனவர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-5)

## வாகரைக்கு நிவாரணம்

கொழும்பு, ஓக. 2

வாகரைப் பிரதேசத்தில் கடந்த மாதம் நடந்த இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து அகதிகளுக்கும், மக்களுக்குமான ஒருவார நிவாரணமும்-

உலர் உணவு நிவாரணப் பொருள்களும்-

உணவு முத்திரைக்குரிய பொருள்களும் — செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வழித்துறையுடன் கடந்த வெள்ளிக்கிழமை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(இ-3)

# சகல சித்திகளையும் தரவல்ல தெய்வீக மந்திரமே காயத்திரி

தொகுப்பு:

**ம. சிவயோகசுந்தரம்**

மந்திரங்களில் சிறந்த முதன்மையான மந்திரம் காயத்திரி மந்திரம். இம் மந்திரம் மனிதனைத் தெய்வமாக்க வல்லது.இது ஓர் உலக தேசிய மந்திரம் ஆகும்.

மனிதன் எம் மந்திரத்தையும் மறக்கலாம். ஆனால் காயத்திரி மந்திரத்தை ஒருபொழுதேனும் மறக்கவே கூடாது. இம்மந்திரம் எல்லோராலும் எந்நேரத்திலும் எவ்விடத்திலும் உச்சரிக்கக் கூடிய மந்திரமாகும். காயத்திரி மந்திரம் எந்த ஆபத்துக்களிலிருந்தும் மனிதனைக் காப்பாற்றும். இதனை மானிடனாகப் பிறந்த எவரும் ஒவ்வொரு நாளும் தவறாது உச்சாடனம் செய்தல்வேண்டும் என்று பகவான் சத்திய சாயி பாபா கூறுகிறார்.

அத்தோடு ஒவ்வொரு வருடமும் ஆயிரக் கணக்கான குழந்தைகளுக்கு இம்மந்திரத்தைத் தாமே முன்னின்று கற்றுக் கொடுக்கிறார். ஒரு முறை இம்மந்திரத்தைச் சொல்லிக்கொடுத்து "நாளையிலிருந்து குழந்தைகள் காயத்திரி மந்திரத்தை உச்சாடனம் செய்யும் பரிசுத்தத்தால் அரிய புத்திக் கூர்மையைப் பெறுவார்களாக'' என ஆசி கூறுகிறார்.

**ஞானக்கதிர்**

காயத்திரி மந்திரத்தை ஜெபிப்பதால் எமது இதயம் மென்மேலும் தூய்மை அடைந்துகாயத்திரியின் ஒளிப் பிரவாகத்தை உள்ளடக்கக் கூடியதாக மாறுகிறது. இதனால் காயத்திரியை ஜெபிக்கும் மனிதன் சூரியனைப் போல் பிரகாசமடைகிறான்.

புகழ்பெற்ற பிரித்தானிய விஞ்ஞானி ஜே. பி. எஸ். ஹல்டேன் என்பவர் காயத்திரியைப் பற்றி பின்வருமாறு கூறுகிறார். "The Gayatri Mantra should be carved on the doors of every laboratory in the World'' அதாவது அனைத்துலகிலுமுள்ள ஆய்வு கூடக் கதவுகள் தோறும் காயத்திரி மந்திரம் கட்டாயம் பொறிக்கப்படல்வேண்டும் என்பதாகும்.

மனத்தூய்மையுடன் ஓதுபவர்களைப் பாதுகாத்து வேண்டியதை அளிப்பது காயத்திரி. இது சர்வ ரோக நிவாரணி சர்வ பய நிவாரணி. இதை காலை மாலை எந்த நேரமும் உச்சாடனம் செய்யலாம். குறைந்தது 108 தடவையாவது காயத்திரி மந்திரத்தை உச்சாடனம் செய்தால் மிகச் சிறந்த முன்னேற்றம் உண்டாகும். நாம் குளிக்கும்போது காயத்திரியை ஓதினால் எமது அகமும் புறமும் தூய்மையாகும் என்று பகவான் பாபா கூறுகின்றார்.

வேதங்களில் நான் காயத்திரி என்கிறான் கண்ணன். காயத்திரி சூரியசக்தி. சூரியனுக்கும் இறைவனுக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு ஆயிரம் கோடி சூரியப் பிரகாசம் பொருந்தியவர் விநாயகப் பெருமான் சூரிய நாராயணா என கண்ணனைச் சொல்லுவர். சிவபெருமானின் கண்களுக்கு சூரியனை ஒப்பிடுவர்.

காயத்திரி மந்திரத்தை உச்சாடனம் செய்யும்பொழுது காயத்திரி தேவியை மனக்கண் முன் நிறுத்தி பின்வருமாறு பிரார்த்திக்கலாம்.

ஓம் பூர் புவஸ் ஸுவ
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீம ஹி
தியோ யோ நப்ரசோதயாத்

யார் நம் அறிவைத் தூண்டுகிறாரோ அந்த சுடர்க் கடவுளின் போற்றுதற்குரிய ஒளியைத் தியானிப்போமாக — என்பது இதன் கருத்து

ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்சர் இம்மந்திரத்தைப் பற்றிக் கூறுகிறார்.

காயத்திரி சக்தி நிறைந்த சிறிய மந்திரம். நாம் கடினமான தெய்வசாதனைகளைச் செய்யத் தேவையில்லை. சிறியதான காயத்திரியை ஓதுங்கள். இதனாலேயே சகல சித்திகளையும் அடைவீர்கள் — என்பதாகும்.

மலர்களின் சத்துப் பொருளாகத் தேன் எப்படி இருக்கிறதோ, பாலின் சத்துப் பொருளாக நெய் எப்படி இருக்கிறதோ, அப்படியே சகல வேதங்களின் சாரமாக காயத்திரி இருக்கிறது என்று வியாசமுனிவரும் — காயத்திரி மந்திரத்துக்குச் சமமான மந்திரம் நான்கு வேதங்களிலும் இல்லை என்று விஸ்வாமித்திர முனிவரும் கூறுகின்றனர்.

கங்கைக்குச் சமமான தீர்த்தமுமில்லை.காயத்திரி ஜெபத்திற்கு மேலான ஜெபம் இருந்ததுமில்லை. இனிமேலும் இருக்காது என யாக்ஞயவள்க்கர் என்னும் முனிவர் கூறியுள்ளார்.

காயத்திரியால் அறிவு சுத்தமாகிறது. இதற்கு உலகில் வேறெந்த வழியும் கிடையாது — என்கிறார் சங்கராச்சார்ய சுவாமிகள்.

சுவாமி சித்பவானந்தர் சொல்கிறார்:

பரமார்த்திகப் பெருவாழ்வை உறுதிப் படுத்துவதற்கு அமைந்துள்ள மந்திரங்களுள் காயத்திரி மந்திரம் தலை சிறந்தது. அதை ஓதவும் உன்னவும் உணரவும் எல்லோரையும் தூண்டுவது சான்றோர் செயல் அதைப் பயன் படுத்துவதற்கு ஏற்ப சமுதாயமானது சீரிய சமுதாயமாகத் திருந்தி அமையும்.

முழு உலகத்துக்குமே தேசிய மந்திரமாக உள்ள இவ் வரிய காயத்திரி மந்திரத்தை ஒவ்வொரு வீட்டிலும், கோவில்களிலும், பாடசாலைகளிலும் குறிப்பாக இளம் சிறார்கள் மத்தியில் ஓதப் பழக்குவது பெரும் நன்மை பயக்கும். ★

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணில்:
**10-08-1977**

விண்ணில்:
**04-07-1996**

செல்வன்

## கதிர்காமநாதன் குலேந்திரன்

*[யாழ். இந்துக்கல்லூரி உயர்தர வகுப்பு கணிதப்பிரிவு 1996 ஆம் ஆண்டு மாணவன்]*

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி
மீளாத் துயில் கொண்ட எம் அன்புத்
தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

04-07-1996 அன்று அகாலமரணமடைந்த எமது அன்புச் செல்வன் கதிர் குலேந்திரனை அவசர சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்ற அரச அதிபர் திரு. செ. பத்மநாதனுக்கும் உதவிய ஏனையோர்க்கும் நன்றி செலுத்துவதோடு, 06-07-1996 அன்று நடைபெற்ற மரணச் சடங்கில் கலந்துகொண்ட யாழ். செயலக அதிகாரிகள், அலுவலர்கள், யாழ் இந்துக்கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

03-08-1996 சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், மதியபோசனத்திலும் நண்பர்கள், உற்றார் உறவினர் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பெற்றோர்:
திரு. இ. கதிர்காமநாதன,
திருமதி சரோஜினிதேவி கதிர்காமநாதன்
சகோதரர்கள்:
பாலேந்திரன் (பாபு), ராஜேந்திரன் (ராஜ¬)
யோகேந்திரன் (சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவன்)

126/2, அரசடி வீதி,
யாழ். இந்துமகளிர் கல்லூரி முன்பாக,
யாழ்ப்பாணம்.

(41772)

## நீங்காத நினைவில் 31ஆம் நாள்



பூவுலகில்:
**29-04-1976**

விண்ணுலகில்:
**04-07-1996**

## சுகந்தன் நவரட்ணசிங்கம்

*(மாணவன் யா/ பரியோவான் கல்லூரி 1995 கணிதப் பிரிவு)*

எம் குடும்பத்தின் குலவிளக்காய், அன்புச் செல்வமாய்
அறவழி காட்டும் ஆற்றலுள்ள தலைவனாய்
அன்புகாட்டும் சகோதரனாய், நல்ல நண்பனாய்
துன்புற்றோர் துயர்துடைக்கும் அன்பனாய்
இறைவன் எமக்களித்த மாபெரும் கொடை நீங்கள்
அண்ணா! மகனே! சுகந்தன்!
நித்திய வான்வீட்டில் உம்மை மீண்டும் சந்திக்கும்வரை
கண்ணீர் மல்கி நிற்கின்றோம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக **3-8-96** சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு வளன்புரம், கொழும்புத்துறை புனித சூசையப்பர் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கற்பலியில் அனைவரும் கலந்து ஒன்றாய் வழிபட அன்புடன் அழைக்கின்றோம்.

மறைவைக் கேட்டு எம் துயரில் பங்கேற்ற அனைவருக்கும் எம் நன்றிகள்.

இவரது பிரிவால் துயருறும்;
தந்தை, தாய், சகோதரிகள்,
G. E. நவரட்ணசிங்கம் (தபால் அதிபர்),
குணசீலி நவரட்ணசிங்கம்
(மனையியல் ஆசிரியை),
சுகிர்தா, சுகன்யா.
(மாணவிகள், வேம்படி மகளிர் கல்லூரி)

போயிட்டி,
இளவாலை.
தற்போதைய முகவரி:
951/10, வளன்புரம்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

(41780)

### கிளிநொச்சி ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதனால் எண்ணிக்கையைச் சரிவரக் கணக்கிடமுடியாது.

கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்ற நோயாளர்கள் மல்லாவிக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும்—

மல்லாவி ஆஸ்பத்திரி விஸ்தரிக்கப்பட்டு வைத்திய சேவை நடைபெறுவதாகவும் — தொண்டர் நிறுவன வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

மேலதிக, அவசர சிகிச்சை தேவைப்படுவோர் வவுனியா ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்படுகின்றனர்.

இதேவேளை முல்லைத்தீவுச் சண்டை தொடங்கிய பின்னர் — கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக— கிளிநொச்சிக்கு வாகன அணியில் கொண்டுவரப்படும் உணவுப் பொருள்கள் அங்கு போய்ச் சேரவில்லை என்றும் அறிய வந்துள்ளது

கிளிநொச்சியில் இருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களில் பெரும்பாலானோர் யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து ஏற்கனவே இடம்பெயர்ந்தவர்கள் ஆவர். (அ-3)

### சமாதானப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கம் இப்போது ஒரு காட்டு யுத்தத்தை மேற்கொள்ளும் அமைப்பாக மாறி வருகிறது. பின்தங்கிய பகுதிகளில் அமைக்கப் பட்டிருக்கின்ற இராணுவ நிலைகள் மீது அவ்வப்போது அந்த இயக்கம் தாக்குதல்களை நடத்தி வருகிறது''.

தமிழ் அரசியற் கட்சிகள் நாடாளுமன்றத்தில் போதியளவு பிரதிநிதித்துவம் வகிப்பதால், அந்தக்கட்சிகளின் கருத்துக்களை அரசு கேட்டு அறிந்து கொள்ளும் என்றும் அவர் தெரிவித்தார், (இ-3)

### அழுக்கவெடி ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரான நாகராசா சுபாஸ்கரன் (வயது 20) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவரின் தந்தையான கனகசுந்தரம் நாகராசா (வயது 55) தூக்கி வீசப்பட்டும் ஆபத்தின்றி, உயிர் தப்பினார். இவர் வண்டியின் பின்பகுதியில் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது

ஐவரும் பனந்துண்டங்களை ஏற்றிக்கொண்டு வீட்டுக்கு வரும்போது, வீதியொன்றில் வண்டி திரும்பியதும், வண்டியின் கீழ் பயங்கர சத்தத்துடன் வெடி வெடித்ததாகவும், அச்சமயம் வண்டி மேலே தூக்கி வீசப்பட்டதாகவும் காயமடைந்தவர் தெரிவித்தார். இவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரீயில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

தூக்கிவீசப்பட்டபோது இறந்தவர்களும் தானும் தந்தையும் சம்பவம் நிகழ்ந்த இடத்திலிருந்து 100 யாருக்கப்பால் திக்குத் திக்காக விழுந்து கிடந்ததாகவும் இறந்தவர்களின் உடல்கள் சிதறிக் கிடந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ--15)


# A|L 97, 98

நாடகமும்
அரங்கியலும்
by
சத்தியா

குறிப்பு:
A/L 97 பிரிவுக்கு
அரங்கு நெறியாழ்கை

ஆரம்பம்: **04-08-96**
10-00 மணி

**N.C.C.A**
வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம்.

நிர்வாகி

[41778]


# மலசலகூடக் குழியிலிருந்து மீட்கப்பட்ட இளைஞன்!

## மோதிரங்கள், மணிக்கூடு அபகரிப்பு

முதல் நாள் காலை 10 மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டவர் மறுநாள் காலை மலசலகூடக் குழி ஒன்றில் இருந்து வெட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்டார்.

இவரது உடல், கைகால் கட்டப்பட்ட நிலையில் இருந்தன. அணிந்திருந்த இரு மோதிரங்களும் மணிக்கூடும் இவரை வெட்டியவர்களால் அபகரிக்கப்பட்டிருந்தன.

மீசாலை வடக்கு வேம்பிராய் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சிவம் மயூரன் (வயது 20) என்ற இளைஞனே காயங்களுடன் மீட்கப்பட்டவராவார்.

சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:-

முதல் நாளான புதன் கிழமை காலை 10 மணிக்கு வீட்டில் இருந்து கடைக்குச் சென்று வருவதாகக் கூறி சைக்கிளில் சென்றவர் மாலையாகியும் வீடு திரும்பவில்லை. இரவும் பார்த்துவிட்டு மறுநாளான நேற்றுக் காலை தேடிப் பார்த்தபோது ஒரு வளவில் மலசலகூடக் குழியில் இருந்து அம்மா, அப்பா என்று அபயக் குரல் கேட்டது.

அக் குழியின் சிமெந்துத் தட்டைத் தூக்கிப்பார்த்த போது, அந்த இளைஞர் அக் குழியில் காணப்பட்டார்.

அவரது கழுத்தளவுக்குத் தண்ணீர் நிறைந்து காணப்பட்டது.

குழியில் காணப்பட்டவரை அவசரம் அவசரமாக வெளியே தூக்கியபோது அவரது கழுத்தில் வெட்டுக் காயங்கள் காணப்பட்டன.

வீதியால் சென்று கொண்டிருந்த வேளை, ஒரு வீட்டின் முன் பகுதியில் இருந்து வந்த இரண்டு பேர் அவரைக் கூப்பிட்டு அவரின் கையில் இருந்த இரண்டு மோதிரங்களையும் மணிக்கூட்டையும் கழற்றி எடுத்துக் கொண்டு, கழுத்தில் மூன்று முறை வெட்டியதாகவும் —

வெட்டியதும் கீழே விழுந்த அவரைக் கட்டி அக் குழியில் போட்டு மூடி விட்டதாகவும் காயமடைந்தவரின் தாயாரால் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (இ-15)

### நிபந்தனை ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பினரையும் நான் குற்றவாளியாக்கவில்லை.

இப்படி தொண்டமான் மேலும் கூறினார்.

இதற்கிடையில் அமைச்சர் தொண்டமான் நேற்று பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில், அரச தரப்பும் புலிகளும் விரும்பினால் தாம் இந்தப் பிரச்சினையில் உதவிடத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார். (இ-3)

## தொண்டர் கலந்துரையாடல்

கொழும் புத்துறை, ஒக 2

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தில் தொண்டர்களாகப் பணிபுரியும் இந்து இளைஞர் சங்கங்களின் உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் நாளை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நல்லூர் சிவன் கோவிலுக்கு முன்பாக அமைந்துள்ள யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை அலுவலகத்தில் இக் கலந்துரையாடல் நடைபெறும். (அ-30)

## விபத்தில் பலி

கொழும்பு, ஒக. 2

இலங்கை லிபரல் கட்சித் தலைவர் கலாநிதி சானக அமரதுங்க நேற்றுக் காலை விபத்து ஒன்றில் மரணமானார்.

அவர் பிரயாணம் செய்த கார் பயாகலையில் களுவத்த சந்தியில் அதிகாலை 5 30 மணியளவில் மதில் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது.

## 31-ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்:
**23 — 05 — 1916**

மறைவு:
**03 — 07 — 1996**

அமரர்

## வைத்திலிங்கம் இராமசாமி

*(பிரபல வர்த்தகர்)*

திதி: **02 — 08 — 1996**

உரும்பராய் கிழக்கைச் சேர்ந்த வைத்திலிங்கம் இராமசாமி அவர்கள் 03-07 96 இல் உருத்திரபுரத்தில் சிவபதமடைந்தார்.

அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதிய போசனமும் உரும்பராய் கிழக்கு சிவன் வீதியில் உள்ள திரு. இ. கணேசலிங்கம் (சின்னமணி) அவர்களது இல்லத்தில் 02-08-96 வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் இடம்பெறும். இந் நிகழ்வில் உறவினர், நண்பர்கள் யாவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அருமைத் தந்தையாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
இ. திருச்செல்வம் குடும்பம்,
இ. கணேசலிங்கம் குடும்பம்.

அம்பிகா ஸ்ரோர்ஸ்
சிவன் வீதி,
உரும்பராய் கிழக்கு,
உரும்பராய்.

(41779)

மரண அறிவித்தல் 2ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 02-08-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.